Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2021-23

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L'État de Poudouchéry

# The Gazette of Puducherry

## PART - I

**சிறப்பு வெளியீடு** **EXTRAORDINAIRE** **EXTRAORDINARY**

அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | | புதுச்சேரி | புதன்கிழமை | 2021 ஸ் | செப்டம்பர் மீ | 15 வ |
| No. | 186 | Poudouchéry | Mercredi | 15 | Septembre | 2021 (24 Bhadra 1943) |
| No. | | Puducherry | Wednesday | 15th | September | 2021 |

புதுச்சேரி அரசு

**தேர்தல் துறை**

*எண் தே.35/2021.*

*புதுச்சேரி, 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி.*

கீழ்க்கண்ட அறிவிக்கைகள் பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுகிறது :—

1. புது தில்லி, சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் (சட்டமியற்றுத் துறை), 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதியிட்ட அறிவிக்கை F.No.H.11024/2/2021-Leg. II:
2. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 15-9-2021 தேதியிட்ட அறிவிக்கை எண் 318/CS-Pud./2021(1);
3. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் 15-9-2021 தேதியிட்ட அறிவிக்கை எண் 318/CS-Pud./2021(2).

**சுர்பிர் சிங், இ.ஆ.ப.,**
தலைமைத் தேர்தல் அதிகாரி.

இந்திய அரசு

## சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

## (சட்டமியற்றுத் துறை)

*புது தில்லி, 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி*
*1943(சக) ஆண்டு பத்ரா மாதம், 24-ஆம் தேதி*

## அறிவிக்கை

எஸ்.ஒ. ....... (E).—2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6-ஆம் தேதி அன்று ஒரு மாநிலங்களவை உறுப்பினர் அவர்களின் பதவிக்காலம் முடிவுபெறுவதால், 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (43/1951) 12-வது பிரிவின்படி, குடியரசு தலைவர் அவர்கள் மேற்படி சட்டத்தின் விதித்துறைகளையும், அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளையும், ஆணைகளையும் ஒட்டி, புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை, மாநிலங்களவைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு இதனால் கோருகின்றார்.

[F.No.H-11024/2/2021-Leg.II].

**அனூப் குமார் மென்டிரட்டா,**
இந்திய அரசின் செயலாளர்.

---

## இந்தியத் தேர்தல் ஆணையம்

*நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி - 110 001.*
***2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி***
***1943(சக) ஆண்டு பத்ராபாத மாதம், 24-ஆம் தேதி***

## அறிவிக்கை

எண். 318/CS-Pud./2021(1):— இந்தியக் குடியரசு தலைவர் அவர்கள், 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (43/1951) 12-வது பிரிவின்படி, **2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதியன்று** இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம், மாநிலங்களவைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு புதுச்சேரி சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்;

எனவே, 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 39-வது பிரிவின் (1) உட்பிரிவில் மற்றும் 56-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மேற்படி தேர்தல் குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் —

**(அ)** 1. 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதியை (புதன்கிழமை) வேட்பு மனுக்கள் செய்துகொள்வதற்குரிய இறுதித் தேதி எனவும்;

2. 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ஆம் தேதியை (வியாழக்கிழமை) வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்யும் தேதி எனவும்;

3. 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதியை (திங்கட்கிழமை) வேட்பு மனுக்களை விலக்கிக்கொள்வதற்குரிய இறுதித் தேதி எனவும்;

4. 2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 04-ஆம் தேதியை (திங்கட்கிழமை) அவசியமானால் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் தேதி எனவும்;

5. எந்தத் தேதிக்கு முன் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமோ அந்தத் தேதியை 2021-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06-ஆம் தேதி (புதன்கிழமை) எனவும்;

இதனால் நிச்சயிக்கிறது. மேலும்,

(ஆ) வாக்கெடுப்பு அவசியமானால், மேற்குறிப்பிட்ட தேதியில் **காலை 09.00 மணி முதல் மாலை 04.00 மணி வரையிலான** காலகட்டம் மேற்கூறிய மாநிலத்தில் வாக்களிக்கும் நேரங்களாக நிர்ணயிக்கிறது.

*(ஆணைப்படி)*

**சுமன் குமார் தாஸ்,**
செயலாளர்.

---

## இந்தியத் தேர்தல் ஆணையம்

*நிர்வாச்சன் சதன், அசோகா சாலை, புது தில்லி — 110 001*

***2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி***
***1943 (சக) ஆண்டு பத்ராபாத மாதம், 24-ஆம் தேதி***

## அறிவிக்கை

எண். 318/CS-Pud./2021(2) :— இந்தியக் குடியரசு தலைவர் அவர்களால் 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதியன்று இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பில் நடத்தப்பட வேண்டிய மாநிலங்களவை தேர்தலுக்கு இதனடியில் கொடுக்கப்பட்ட அட்டவணை (1)-ல் குறிப்பிடப்பட்டவரை தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், அட்டவணை (2)-ல் குறிப்பிடப்பட்டவரை அவரது அலுவல்களைச் செய்வதில் உதவிபுரிய உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரியாகவும், 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படியும் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 22-வது பிரிவின் உட்பிரிவு (1)-ன் படியும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டும், புதுச்சேரி அரசைக் கலந்தாலோசித்தும், இந்தியத் தேர்தல் ஆணையம் இதனால் நியமிக்கின்றது.

அட்டவணை

| **ஒன்றிய ஆட்சிப்பரப்பின் பெயர்** (1) | **தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமிக்கப்பட்ட அதிகாரி** (2) | **உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமிக்கப்பட்ட அதிகாரி** (3) |
|---|---|---|
| புதுச்சேரி | திரு R. முனிசாமி,<br>செயலாளர்,<br>சட்டப்பேரவை செயலகம்,<br>புதுச்சேரி. | திருமதி N. அலமேலு,<br>விவாத பதிவாளர்,<br>சட்டப்பேரவைச் செயலகம்,<br>புதுச்சேரி. |

(ஆணைப்படி)

**சுமன் குமார் தாஸ்,**
செயலாளர்.

GOVERNMENT OF PUDUCHERRY

**ELECTIONS DEPARTMENT**

*No. E.35/2021.*

*Puducherry, the 15th September 2021.*

The following notifications are republished for information of the public :—

1. Ministry of Law and Justice (Legislative Department)'s Notification, dated 15-9-2021, in F.No.H.11024/2/2021-Leg. II;

2. Election Commission's Notification No. 318/CS-Pud./2021 (1), dated 15-9-2021;

3. Election Commission's Notification No. 318/CS-Pud./2021 (2), dated 15-9-2021.

SHURBIR SINGH, I.A.S.,
Chief Electoral Officer.

---

GOVERNMENT OF INDIA

**MINISTRY OF LAW AND JUSTICE**

**(Legislative Department)**

*New Delhi, the 15th September, 2021*
*24 Bhadra, 1943 (Shaka)*

**Notification**

S.O. ........ (E). — In pursuance of section 12 of the Representation of the People Act, 1951 (43 of 1951), the President is pleased to call upon the elected members of the Legislative Assembly of the Union territory of Puducherry to elect, in accordance with the provisions of the said Act and of the rules and orders made thereunder, one (1) member for the purpose of filling the seat which is due to fall vacant on the 6th October, 2021 on the retirement of one member of the Council of States, on the expiration of his term of office.

[F.No. H.11024/2/2021-Leg.II].

Anoop Kumar Mendiratta,
Secretary to the Government of India.

---

**ELECTION COMMISSION OF INDIA**

*Nirvachan Sadan, Ashoka Road, New Delhi – 110 001.*
***Dated:15th September, 2021***
***Bhadrapada 24, 1943 (Saka)***

**NOTIFICATION**

No. 318/CS-Pud./2021(1):— Whereas, the President of India has, by notification issued under section 12 of the Representation of the People Act, 1951 (43 of 1951) and published in the Gazette of India on **15th September, 2021,** been pleased to call upon the elected members of the Legislative Assembly of the Union territory of Puducherry to elect one Member to the Council of States ;

Now, therefore, in pursuance of sub-section (1) of section 39 and section 56 of the said Act, the Election Commission of India hereby —

**(A) appoints,** with respect to the said election ;

(a) the 22nd September, 2021 (Wednesday), as the last date for making nominations ;

(b) the 23rd September, 2021 (Thursday), as the date for the scrutiny of the nominations ;

(c) the 27th September, 2021 (Monday), as the last date for the withdrawal of candidatures ;

(d) the 04th October, 2021 (Monday), as the date on which a poll shall, if necessary, be taken ; and

(e) the 06th October, 2021 (Wednesday), as the date before which the election shall be completed ; and

**(B) fixes the hours** from **9.00 a.m.** to **4.00 p.m.,** as the hours during which the poll shall, if necessary, be taken in the above-mentioned State on the date specified above for the election.

(By order)

**SUMAN KUMAR DAS,**
**SECRETARY.**

## ELECTION COMMISSION OF INDIA

*Nirvachan Sadan, Ashoka Road, New Delhi – 110 001.*
**Dated:15th September, 2021**
**Bhadrapada 24, 1943 (Saka)**

## NOTIFICATION

No. 318/CS-Pud./2021(2):— In pursuance of section 21, and in exercise of the powers conferred by sub-section (1) of section 22 of the Representation of the People Act, 1951 (43 of 1951), the Election Commission of India, in consultation with the Government of the Union territory of Puducherry, specified in the coloumn (1) of the Table below hereby—

(i) designates the Officer, specified in the corresponding entry in column (2) of the said Table to be the Returning Officer; and

(ii) appoints the Officer, specified in the corresponding entry in column (3) of the said Table, to be the Assistant Returning Officer to assist the Returning Officer in the performance of his functions;

in respect of the biennial election to the Council of States, to be held in the Union territory of Puducherry in pursuance of the Notification of the President of India, published in the Gazette of India on 15th September, 2021:—

Table

| Name of Union Territory (1) | Returning Officer (2) | Assistant Returning Officer (3) |
|---|---|---|
| Puducherry | Shri. R. Mounissamy, Secretary, Legislative Assembly Secretariat, Puducherry. | Smt. N. Alamelu, Editor of Debates, Legislative Assembly Secretariat, Puducherry. |

(By order)

**SUMAN KUMAR DAS,**
**SECRETARY.**

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* the Director, Government Press, Puducherry.